**திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன்** : தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி அசலை மட்டும் தர ஏற்றுக்கொண்டிருக்கிறார்களா ? அல்லது இது வரையில் அந்த அசலுக்காகும் வட்டியையும் சேர்த்துத் தர ஏற்றுக்கொண்டிருக்கிறார்களா ?

(பதில் இல்லை)

**திரு. எஸ். இராமச்சந்திரன்** : பொதுக்கூட்ட நிகழ்ச்சிகளில் அமைச்சர்கள் கலந்துகொள்வது தவறு இல்லை. நிர்வாகத்தில் இருப்பவர்கள் கலந்து கொள்வது என்பது ஜனநாயகத்திற்கே முரணானது என்கிற தத்துவம் இதில் புறக்கணிக்கப்பட்டிருப்பது தெரியுமா ? கட்சி சம்பந்தமான கூட்டங்களில் நிர்வாகத்தினர் கலந்து கொள்ளாதிருக்க இந்த அரசு தக்க வழிவகை செய்யுமா?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை** : ஜனநாயகத்தில் ஒரு நாட்டின் ஆட்சித் தலைவராக இருப்பவர், அந்நாட்டின் ஓர் அரசியல் கட்சித் தலைவராக இருப்பது என்பது பொருத்தமானது. இதில் இருந்து எது பொதுப் பணி, எது அரசாங்கப் பணி என்று பிரித்துப் பார்ப்பது மிகவும் கடினமானது. ஆனால், அந்தந் தலைவர்களே அதைப்பற்றிய மரபுகளை ஏற்படுத்திக்கொண்டு, அதன்படி எந்தச் செலவை சொந்தத்தில் போட்டுக்கொள்வது, எதை, எதை அரசாங்க இனத்தில் போடுவது என்று தீர்மானிக்கவேண்டும். இப்படி நடக்கவேண்டும் என்பதாக திராவிட முன்னேற்றக் கழக அமைச்சர்களுக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது.

**திரு. எம். எஸ். மணி** : இந்தியப் பிரதமர் தமிழ்நாட்டுக்கு வந்திருந்தபோது அவரது விஜயம் சம்பந்தமாகச் செலவழிக்கப்பட்ட லட்சக்கணக்கான ரூபாய்களை ஒரு கட்சியிடம் இருந்து எதிர் பார்ப்பது நிறைவேறுமா ? அந்தப் பணத்தை அவர்களிடம் இருந்து வசூலிக்கிறபோதே அதற்கான வட்டியையும் வசூலிக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படுமா ?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை** : தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி அந்தப் பணத்தைக் கொடுத்தாலே நல்ல மரபு என்று நான் கருதுகிறேன்.

*Salary Savings Scheme*

*** 413 *Q.*—Thiru K. VINAYAKAM** : Will the Hon. the Chief Minister be pleased to state whether there is any proposal to allow the N.G.G.Os. to take out policies from L.I.C. and to apply to the Pay Disbursing Officer for deducting the monthly premia from their salaries every month?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை** : ஆம், அரசுத் தலைமைச் செயலகம், கருவூலங்கள், கணக்குகள் நெறியாளர் அலுவலகம், சம்பள கணக்குகள் அலுவலகம், வருவாய்த் துறை கழகம் (நிலவரி), தலைமைப் பொறியாளர் (பொது) அலுவலகம் ஆகியவற்றில் பணியாற்றும் அரசிதழ் பதிவில்லா அரசு ஊழியர்களைப் பொறுத்தவரையில், முன்னோடியாக, ஆயுள் காப்புறுதிக்

1967 நவம்பர் 24]

கழகத்தின் Life Insurance Corporation சம்பளச் சேமிப்புத் திட்டத்தை (அதாவது அவர்களுடைய சம்பளத்திலிருந்து காப்புறுதித் தவணைத் தொகை பிடித்துக் கொள்ளும் திட்டத்தை) செயல்படுத்திப் பார்க்குமாறு அரசு ஆணை வெளியிட்டுள்ளது.

THIRU K. VINAYAKAM : Consequent on this Government order, have there been instances where the non-gazetted Government Officers have taken out policies from the Life Insurance Corporation and contributed the premia from their salaries, and how many such instances were brought to the notice of the Government?

THE HON. THIRU C. N. ANNADURAI : I do not have details about such incidents.

திரு. கரு. சீமைச்சாமி : அரசாங்க உத்தியோகஸ்தர்கள் ஏற்கனவே எடுத்திருக்கும் பாலிசிகளேயும் இந்தத் திட்டத்தின் கீழ் சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : அதுபற்றி பரிசீலித்துப் பதில் சொல்கிறேன்.

*Manufacture of infant food*

* 414 Q.—THIRU A. M. RAJA : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state whether the Government have proposed to set up a factory for the manufacture of food for infants and invalids?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : குழந்தைகள்-நோயாளிகள் உணவு தயாரிப்பதற்குரிய தொழிற்சாலே ஒன்றை உதகையில் நிறுவுவது பற்றிய திட்டம் ஒன்று அரசாங்கத்தின் ஆலோசனையில் இருந்து வருகிறது. அது இன்னும் தொடக்க நிலேயிலேயே இருந்து வருகின்றது.

திரு. ஏ. எம். ராஜா : சட்டமன்றத் தலைவர் அவர்களே, குழந்தைகளுக்கான பால் உணவு தட்டுப்பாடு அதிகரித்து வருவதாலும், தேவை மிகுதிப்பட்டிருப்பதையும் உத்தேசித்து அந்தத் தொழிற்சாலே ஏற்படுவதை விரைவுபடுத்த அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் தலைவர் அவர்களே, குழந்தைகளுக்கான பால் உணவு தயாரிப்பில் இந்த அரசு 1957-ஆம் ஆண்டில் இருந்தே அதிக கவனம் காட்டி வருகிறது. ஆனல் அப்படி ஒரு தொழிற்சாலே இங்கே நிறுவ வேண்டும் மென்ருல் பத்தாயிரம் லிட்டர் பால் ஒரு நாளேக்குத் தேவைப்படுகிறது. ஒவ்வொரு தினமும் பத்தாயிரம் லிட்டர் பாலே எங்கே மிச்சப்படுத்தி எப்படிக் கொடுப்பது என்பது தான் பிரச்சினே. டென்மார்க்கைச் சேர்ந்த ஒரு கம்பெனி ஒன்று பண உதவி, தொழில் உதவி எல்லாம் அளிப்பதாக முன் வந்தது.